# ஆண்டின் பொதுக்காலம் 12 ஆம் வாரம்

# திருவழிபாடு ஆண்டு - B

# 2024-06-23

*(இன்றைய வாசகங்கள்:*

*யோபு நூலிலிருந்து வாசகம்* 38: 1, 8-11,

*திருப்பாடல்* 107: 23-24. 25-26. 28-29. 30-31,

*திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம்* 5: 14-17,

*மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 4: 35-41)

*திருப்பலி முன்னுரை*

*இறை இயேசுவில் மிகவும் இனிமையானவர்களே! ஆண்டின் பொதுக்காலம்* 12 *ஆம் வார இறைவழிபாட்டில் பங்கேற்றுக் கொண்டிருக்கும் உங்கள் அனைவரையும் இறை ஆற்றல் முழுமையாக ஆட்கொள்ள அன்புடன் வாழ்த்துகிறேன்.*

*”அக்கரைக்குச் செல்வோம், வாருங்கள் ” என்னும் அழைப்பு இன்று நம் காதுகளில் இறைவார்த்தைகள் ஊடாக ஒலிக்கிறது. நீங்கள் உழைப்பையே வாழ்வுநிலையாக மாற்றிக்கொண்டவரா? ஓய்வின்றி வேலை செய்பவரா? உங்கள் குடும்பத்தினருடன், நெஞ்சுக்கு நெருக்கமானவர்களுடன் நேரம் செலவழிப்பதற்குக்கூட உங்களுக்கு நேரமில்லாதபடி பணியாற்றுகின்றீர்களா? அப்படியென்றால், அக்கரைக்குச் செல்வோம், வாருங்கள் என்னும் அழைப்பு உங்களுக்குத்தான். உழைத்தது போதும். ஓடி, ஆடி வேலை செய்தது போதும். உங்களுக்கு ஓய்வு தேவைப்படுகிறது. உங்கள் குடும்பத்தாருடன் நேரம் செலவழிக்க, உறவாட, தனிமை தேவைப்படுகிறது. அக்கரைக்குச் செல்லுங்கள். உறவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். அக்கரைக்குச் செல்வோம், வாருங்கள் ” என்னும் அழைப்பு எங்களுக்குத்தான். இன்றைய திருப்பலி வழியாக அக்கரைக்குச் செல்ல இயேசு தந்த அழைப்புக்காக நன்றி கூறுவோம். எல்லாப் பணிகளுக்கு மத்தியிலும் இயேசுவுக்கும், எனக்கு நெருக்கமானவர்களுக்கும் நேரம் ஒதுக்கி, தனித்திருக்க, உறவை மேம்படுத்த அருள்வேண்டி இத்திருப்பலியில் நாம் உருக்கமாக மன்றாடுவோம்.*

## ***விசுவாசிகள் மன்றாட்டுகள்:***

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அன்புத் தந்தையே இறைவா!*

*திருஅவையின் ஊழியர்களின் நற்செய்திப் பணியினை அசீர்வதித்து, உமது மாண்பிலும், மகத்துவத்திலும் இறைபட்சிப் பணியினை மேன்மேலும் செய்தருள வேண்டிய வரத்தைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*வாழ்வின் ஊற்றாகிய இறைவா!*

*நாங்கள் பழைய வாழ்க்கை முறைகளைக் களைந்து, புதிய வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடிக்கவும், நற்குணங்களைப் பெற்று வாழவும் வேண்டிய அருளைப் பொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*விடியலின் தெய்வமே இறைவா!*

*சூறாவளியினின்று யோபுவுக்குக் கூறியது போல், எங்களுக்கும் நம்பிக்கையைத் தந்து, துன்ப துயர நேரங்களில் உடனிருந்து வழிநடத்த வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*படைப்பின் பரம்பொருளே இறைவா!*

*அனைத்துப் படைப்புகளுக்கும் மேலாக கடவுள் நம்மை நேசிக்கிறார். எனவே நாங்கள் இறைவனோடு இணைந்து வாழ்ந்து புதிய படைப்பாக மாற வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அன்பின் இறைவா!*

*உமது பேரன்பிற்கேற்ப எங்களை வழிநடத்தும். நாங்கள் எங்களுக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்து பிறரை அன்பு செய்யும் கருவிகளாக மாற வரமருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அழைத்தலின் நாயகனே இயேசுவே,*

*அக்கரைக்குச் செல்ல நீர் தந்த அழைப்புக்காக நன்றி. எல்லாப் பணிகளுக்கு மத்தியிலும் உமக்கும், எனக்கு நெருக்கமானவர்களுக்கும் நேரம் ஒதுக்கி, தனித்திருக்க, உறவை மேம்படுத்த அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*உற்ற துணைவராம் இறைவா,*

*இங்கு ஒன்றாக குழுமியுள்ள எங்களை நிறைவாக ஆசிர்வதித்து நாம் ஒவ்வொருவரும் இறைவார்த்தையில் வேரூன்றி, அன்றாடம் அதை வாசித்து, சவால்கள் நிறைந்த உலகில் நிறைந்த பலன் தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*வரங்களைப் பொழிபவராம் இறைவா,*

*எங்கள் பங்கு குடும்பத்தில் வாழும் எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவரும், உமது நிழலில் புகலிடம் தேடும் இறையாட்சியின் மக்களாக வாழவும், உடல், உள்ள, ஆன்ம நலன்களில் வளரவும் தேவையான வரங்களைப் பொழிய வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.*